தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

விலை ரூ. 15/– மலர் 20 - இதழ் 01 – மே 2018 | Price : Rs. 15/- Vol : 20 - Issue : 01 - May 2018

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ DEPARTMENT

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி துவக்க விழா

கிராம ஸ்வராஜ் அபியான் இயக்கத்தின் கீழ் வாழ்வாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு தின விழா

திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிர் மேற்கோள்ளும் எந்த செயலிலும் வெற்றி பெறுவார்கள் என்பதை அனைவரும் அறிவீர். அந்த அளவிற்கு மகளிர் சுய உதவிக் குழுவினர் ஆர்வத்துடன் செயல் படுவார்கள். உங்களின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் நமது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் துணை நிற்கும்.

சுய உதவிக் குழு மகளிர் பொருளாதார சுயசார்பு பெற்று முன்னேற்றம் அடைந்திட, நமது தமிழக அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக செயல்படுத்தி வருகிறது. கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வசிக்கும் ஏழைப் பெண்களை சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து அவர்களுக்கு தொழிற்பயிற்சிகள் வழங்குதல், சுய தொழில் மேற்கொள்ள வங்கிக் கடன்கள் பெற்றுத் தருதல், சுழல் நிதி, ஆதார நிதி, நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு கடனுதவி வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை நம் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

மேலும் ஒரே தொழில்களை மேற்கொள்ளும் குழுக்களை இணைத்து ஒத்தத் தொழில் குழுக்கள் அமைத்தல், படித்த இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கி, அவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருதல், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகளின் வாயிலாக கிராமப்புற பெண்கள் பொருளாதார முன்னேற்றம் அடைய தொழில் வாய்ப்புகளை உருவாக்கித் தருதல், வேளாண்மையில் பெண்களையும் ஈடுபடச் செய்தல், மாடித் தோட்டம் அமைத்திட பயிற்சி தருதல், சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக பல்வேறு வகையான விற்பனைக் கண்காட்சிகளை நடத்துதல் என பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, பெண்களின் முன்னேற்றத்திற் காக நம் நிறுவனம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த வாய்ப்பை அனைவரும் நல்ல முறையில் பயன்படுத்தி வாழ்வில் பொருளாதார வளர்ச்சி பெற்றிட எனது வாழ்த்துகள்.

இந்த ஆண்டு 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர் அனைவருக்கும் எனது வாழ்த்துகள். தற்போது எதிர்காலத்திற்கு எந்த படிப்பை தேர்வு செய்வது? எந்தக் கல்லூரியைத் தேர்வு செய்வது? என்று மாணவர்களும், பெற்றோர்களும் மிகுந்த குழப்பத்தில் இருப்பீர்கள். இந்த நேரத்தில் உரிய ஆலோசகர்களிடம் ஆலோசனைகளைக் கேட்கலாம். மேலும் எந்தத் துறையில் அதிக வேலை வாய்ப்பு உள்ளது? எந்தத் துறை நமக்கு ஏற்றது? என ஆலோசனை செய்து தங்களின் மேற்படிப்பைத் தொடங்க வேண்டும். பெற்றோர்கள் தங்களின் விருப்பப்படி படிக்க வைக்க நினைக்காமல் பிள்ளைகளின் விருப்பத்தையும் கேட்டு படிக்க வைப்பது அவசியம்.

அதேபோல் பெண் பிள்ளைகளை படிக்க வைக்க பெற்றோர்கள் தயங்குகின்றனர். அது முற்றிலும் தவறான செயலாகும். ஆண்களுக்கு சற்றும் குறைவில்லாமல் பெண்கள் பல துறைகளில் சாதனை படைத்து வருகின்றனர். ஆண்களைக் காட்டிலும் பெண்கள் கல்வி அறிவு பெறும் போது, அவர்கள் பயன் பெறுவதைக் காட்டிலும் அவர்களைச் சுற்றி வசிப்பவர்கள், அவர்களின் பிள்ளைகள் என ஒட்டுமொத்த சமுதாயமே முன்னேற்றம் அடைய வாய்ப்புள்ளது. எனவேதான் பெண் கல்வியை தமிழக அரசு அதிக கவனத்துடன் ஊக்கப்படுத்தி வருகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் அனைவருமே தங்கள் பெண் குழந்தைகளைப் படிக்க வைத்திட வேண்டும்.

வாழ்த்துகளுடன்,

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

கிராம ஸ்வராஜ் அபியான் இயக்கத்தின் கீழ் வாழ்வாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு தின விழா 09

மகளிர் மேளா 2018 கோடைக் கொண்டாட்டம் விற்பனைக் கண்காட்சி 05

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம் 15

மாவட்டங்களில் வாழ்வாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு தின விழா 11



கொள்ளு – பருப்பு பொடி 24

தொற்றா நோய்கள் கண்டறியும் திட்டம் 33

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 27

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

கோடை விடுமுறையினை பயனுள்ள முறையில் கழித்திடும் வகையில் தமிழகத்தில் உள்ள மாவட்டங்களின் சுற்றுலாத் தலங்கள் குறித்த செய்திகள் அனைவருக்கும் பயனுள்ளதாக இருந்தது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மட்டுமில்லாமல் அனைவருக்கும் ஏற்ற இதழ் முற்றம்.

திருமதி. மீனாட்சி குணசேகரன்,
ஆலயம் மகளிர் சுய உதவிக் குழு,
திருவையாறு, தஞ்சாவூர் மாவட்டம்

தமிழகத்தில் உள்ள கிராமங்களில் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையை ஏற்படுத்தி, சுகாதாரம் காத்திட 'முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்' என்ற இயக்கத்தை செயல்படுத்தி வரும் ஊரக வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள், களப்பணியின் குரல், சுகாதாரம் குறித்த படக் கதைகள் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன.

திருமதி. கவிதா குணசேகரன்,
ரோஜா மகளிர் சுய உதவிக் குழு,
ஜக்கனாரை, நீலகிரி மாவட்டம்.

கிராமப்புறங்களில் ஏழ்மையை போக்கும் வகையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகள் குறித்த செய்திகளும், பொதுக் கட்டுரைகளும், சுற்றுலா இடங்கள் குறித்த செய்திகளும் சிறப்பாக உள்ளன.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
நங்கவள்ளி ஊராட்சி கூட்டமைப்பு,
நங்கவள்ளி, சேலம் மாவட்டம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட்டு வரும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு எங்களின் பாராட்டுகள். எதிர்வரும் காலத்தில் மேலும் சிறப்பாக செயல்பட்டு சாதனை படைக்க வாழ்த்துகள்.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
சிப்பி மகளிர் சுய உதவிக் குழு,
முட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
மலர் 20 – இதழ் 01 – மே 2018 – விலை ரூ. 15/–

- கௌரவ ஆசிரியர்
  திரு. **பிரவீன் பி நாயர்,** இ.ஆ.ப.,
  முதன்மை செயல் அலுவலர்
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
- பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
  எஸ். சின்னப்பன்
  செயலர், முற்றம்
- நிர்வாக ஆசிரியர்கள்
  ஜா. ஆனி மேரி சுவர்ணா, இ.ஆ.ப.,
  செயல் இயக்குநர்,
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
  முதன்மை செயல் இயக்குநர்,
  தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

  எஸ். ஜானகி,
  டி.ஆர்.ஓ. / பொது மேலாளர்
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
- ஆசிரியர் குழு
  கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்
  ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

  கா. முத்து மீனாள், கூடுதல் இயக்குநர்
  தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

  பா. செல்வராஜன், கூடுதல் இயக்குநர்
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  ஜி. சரஸ்வதி கணேசன், கூடுதல் இயக்குநர்
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  சி. கே. வீரணன், கூடுதல் இயக்குநர்
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
- பொறுப்பாசிரியர்
  சு, மகேஷ்வரன்
  மக்கள் தொடர்பு அலுவலர்
- துணை ஆசிரியர் முற்றம்
  ஏ. கண்ணன்
- முதுநிலை கணக்காளர்
  சு. சசிகலா
- பிழை திருத்துபவர்
  எஸ். எஸ். ரவிச்சந்திரன்
- கணினி வடிவமைப்பு
  கோ. குருபிரசாத்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 – 4211 9497
044 – 2817 3412 / 3413
தொலை நகல் : 044 – 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

நிலைத்த வளர்ச்சிக்கு கல்வி...

அன்புள்ள வாசகர்களுக்கு,

கல்வி ஆண்டு தொடங்கியுள்ளது. புதிய பாடத் திட்டங்கள், மாணவர்களுக்குக் கல்வி கற்பதை ஊக்குவிக்க மேலும் பல சலுகைகள் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கக் கூடிய ஒன்றாகும். உலக நாடுகள் ஒன்றிணைந்து ஐ. நா. சபையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளன. அதாவது, 2030ஆம் ஆண்டிற்குள் அனைத்து நாடுகளும் நிலைத்த வளர்ச்சிக்கான இலக்கினை அடைந்து விட வேண்டும் என்பதே அந்தத் தீர்மானமாகும்.

நாடுகள் நிலைத்த வளர்ச்சியை அடைய வேண்டுமானால் 17 முக்கியமான குறிக்கோள்களை அடைந்திருக்க வேண்டும். அவற்றுள் முக்கியமான ஒன்று, 'அனைவருக்கும் கல்வி'. ஒரு நாட்டில் பள்ளியில் சேரும் வயதுடைய பிள்ளைகள் அனைவரையும் 100 சதவீதம் பள்ளியில் சேர்க்க வேண்டும். இதில் எந்தப் பிள்ளையும் விடுபட்டுவிடக் கூடாது.

பள்ளியில் சேர்ந்தவர்கள் அனைவரும் தொடர்ந்து படிக்க வேண்டும். எந்தப் பிள்ளையும் இடையில் நின்று விடாமல் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். இடையில் படிப்பை நிறுத்தியவர்கள் மீண்டும் கல்வியை தொடர்வதற்கு உதவ வேண்டும். பள்ளி கல்வி முடிந்து உயர் கல்விக்கு செல்வதற்கு ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரின் திறமை மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப, அவர்களால் முடிந்த அளவிற்கு எளிதில் பெறக் கூடிய தொழிற்கல்வியோ, தொழில்நுட்பக் கல்வியோ அல்லது அறிவியல், வணிகம் மற்றும் கலைக் கல்வியில் பட்ட படிப்போ படிக்க போதுமான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசுடன் பெற்றோர்களும் முன்வர வேண்டும்.

கல்வி கற்காத வயது வந்தோர் அனைவருக்கும் எண்ணறிவும், எழுத்தறிவும் கொடுப்பதோடு சுற்றுச்சூழல், சுகாதாரம், அரசுத் திட்டம் ஆகிய கல்வியினை முதியோர் கல்வி மற்றும் முறைசாராக் கல்வி மையங்கள் மூலம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு ஊராட்சியை எடுத்துக் கொண்டால் அனைவரும் கற்றவர்களாக இருக்க வேண்டும். அதுவே நிலைத்த வளர்ச்சிக்கான குறிக்கோள்களில் ஒன்றாகும்.

மகளிர் குழு உறுப்பினர்கள் தங்கள் குழு உறுப்பினர்களின் குடும்பங்களில் உள்ள அனைவரும் கல்வி கற்றவர்களாக இருக்க வேண்டும் என உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். அதோடு நின்று விடாமல், அதனை நிறைவேற்றும் வகையில் அதற்கான செயல் திட்டத்தை ஐந்தாண்டு காலத்திற்குத் தீட்டுங்கள். ஒவ்வொரு ஆண்டிற்கும் ஆண்டு திட்டத்தைத் தீட்டி இலக்கை நிர்ணயித்து சாதனை படைக்க முயலுங்கள். ■

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

மகளிர் மேளா 2018 – கோடைக் கொண்டாட்டம்
மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின்
விற்பனைக் கண்காட்சி

தமிழ்நாடு அரசு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அவற்றை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத் தின் வாயிலாக நடைமுறைப்படுத்தி வருகிறது. அதன் ஒருபகுதியாக சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் தரமான பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பினை ஏற்படுத்தி, அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்திடவும், அவர்களின் திறனை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையிலும் கிராம அங்காடிகள், கல்லூரிச் சந்தைகள் மற்றும் பல்வேறு கண்காட்சிகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெறுகின்றன.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திடும் நோக்கிலும், விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திடும் வகையிலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னையில் மாநில அளவில் பண்டிகை மற்றும் விடுமுறைக் காலங்களில் விற்பனைக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இவ்வாண்டு, கோடை விடுமுறையை முன்னிட்டு சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், மகளிர் மேளா 2018 – கோடைக் கொண்டாட்டம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியினை, 25.04.2018 அன்று, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்களும், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மருத்துவர் சி. விஜயபாஸ்கர் அவர்களும் இணைந்து துவக்கி வைத்து, சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களைப் பார்வையிட்டனர்.

தொடர்ந்து மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முன்னிலை வகித்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மருத்துவர்

திரு. சி. விஜயபாஸ்கர் அவர்கள் 'மாதவிடாய் சுகாதார மேலாண்மை ஆர்வலர்களுக்கான பயிற்சிக் கையேட்டினை' வெளியிட்டார்.

அதைத் தொடர்ந்து மகப்பேறுற்ற தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்களுக்கு இலவசமாக சானிடரி நாப்கின்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள பிரசவித்த தாய்மார்கள், பெண் புறநோயாளிகள் மற்றும் பெண் கைதிகள் ஆகியோருக்கு இலவசமாக சானிடரி நாப்கின்கள் வழங்க தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சானிடரி நாப்கின் உற்பத்தியாளர் கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள 50 சுய உதவிக் குழுக்களுக்கு பணி ஆணையினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் வழங்கினார்.

இந்தப் பணி ஆணையினைப் பெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெல்ட் வகை சானிடரி நாப்கின் பாக்கெட் (6 எண்ணிக்கை கொண்டது) மாதந்தோறும் மூன்று இலட்சம் பாக்கெட்டுகள் என, வருடத்திற்கு ரூ. 7.56 கோடி மதிப்பில், 36 இலட்சம் சானிடரி நாப்கின்கள் தயாரித்து, தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்திற்கு வழங்க உள்ளனர்.

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஆர். விஜயகுமார் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர். பி. உமாநாத், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. எஸ். பி. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் அலுவலர்கள் திரு. பா. செல்வராஜன் அவர்கள், திரு. ஜா. சம்பத் அவர்கள், திரு. சி. கே. வீரணன் அவர்கள் மற்றும் இணை இயக்குநர்கள், பொது மேலாளர் அவர்கள், அரசு அலுவலர்கள், பத்திரிக்கையாளர்கள், பொதுமக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

25.04.2018 முதல் 24.05.2018 வரை நடைபெற்ற மகளிர் மேளா 2018 – கோடைக் கொண்டாட்டம் விற்பனைக் கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த 55 அரங்குகளில் தமிழகத்தின் 32 மாவட்டங்களைச் சேர்ந்த 120க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களான, கோடைக்காலத் திற்கேற்ற பட்டு, பருத்தி ஆடைகள், செயற்கை ஆபரணங்கள், பல்வேறு உலோகங்களால் செய்யப்பட்ட கலைப் பொருட்கள், தரமான வீட்டு உபயோகப் பொருட்கள், தோலினால் செய்யப்பட்ட பொருட்கள், மண் மற்றும் செராமிக்கால் செய்யப்பட்ட அழகிய பொம்மைகள், வாசனைப் பொருட்கள், மரச் சிற்பங்கள், சுடுமண் சிற்பங்கள், மூலிகைப் பொருட்கள், பாரம்பரிய கிராமிய உணவுப் பொருட்கள், அனைவருக்கும் ஏற்ற ஆயத்த ஆடை வகைகள், சணல், பனை ஓலை, வாழை நார் ஆகியவற்றில் செய்யப்பட்ட பொருட்கள், வாசனைப் பொருட்கள் என தரமான பொருட்களை நியாயமான விலைக்கு விற்பனை செய்தனர். ■

உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னதத் திட்டமான 'உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும்' திட்டம், 24.02.2018 அன்று சென்னையில் துவக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா நடைபெற்று வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் DSMS பூமாலை வணிக வளாகத்தில் 04.03.2018 அன்று உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் திரு. சு. கணேஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. வைரமுத்து அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மருத்துவர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் கலந்து கொண்டு, 123 பெண்களுக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள். இவ்விழாவில் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், புதுக்கோட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. ச. சரோஜாதேவி அவர்கள், பிற துறை அரசு அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர் கலந்து கொண்டனர். ■

தஞ்சாவூர் மாவட்டத்தில் மகளிர் திட்டம் சார்பில் உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு. அண்ணாமலை, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள் கலந்து கொண்டு பெண்களுக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார்கள். இவ்விழாவில் மாநிலங்களவை உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. இந்துபாலா அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் பிற துறை அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

சிவகங்கை மாவட்டத்தில் மகளிர் திட்டம் சார்பில் 04.03.2018 அன்று உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. க. லதா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில் வாரியத் துறை அமைச்சர் திரு. ஜி. பாஸ்கரன் அவர்கள் கலந்து கொண்டு, 86 பெண்களுக்கு மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கினார். இவ்விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. செந்தில்நாதன் அவர்கள், சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. இளங்கோ அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் பிற துறை அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

திருவண்ணாமலை மாவட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி

மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள் 15.03.2018 அன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் தூய்மை பாரத இயக்கப் பணிகளை பார்வையிட்டதுடன், அனைத்துத் துறையினரால் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிப் பணிகளையும் ஆய்வு செய்தார். மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களின் வருகையை முன்னிட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனை அரங்கு திருவண்ணாமலை கலைக்கல்லூரி அருகில் உள்ள மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த அரங்கினை மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர் பார்வையிட்டனர். அங்கு வைக்கப்பட்டிருந்த

பொருட்கள் குறித்த விபரங்களை திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களிடம் விளக்கிக் கூறினார். மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் சுய உதவிக் குழுக்களைப் பாராட்டியதுடன் கலைப்பொருட்களையும் வாங்கினார். ■

மதி அங்காடி திறப்பு விழா

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஆடையூர் செம்பருத்தி சுய உதவிக் குழுவின் சார்பில் செயல்படும் நகலகம் 16.04.2018 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையிலும், மெய் (சிறப்புக் குழு) சுய உதவிக் குழுவின் சார்பில் செயல்படும் நகலகம் திருவண்ணாமலை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் 19.04.2018 அன்று மாவட்ட தலைமை நீதிபதி அவர்களின் தலைமையிலும் திறக்கப்பட்டது.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் மாவட்ட துணை நீதிபதி அவர்கள், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்கள், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் மற்றும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் கூட்டமைப்பு சங்க நிர்வாகிகள், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கிராம சுயாட்சி இயக்க விழிப்புணர்வு ரதம்

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் கிராம சுயாட்சி இயக்க விழிப்புணர்வு இரதத்தினை 02.05.2018 அன்று, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கிராம சுயாட்சி இயக்க பொறுப்பாளரும், மத்திய சுகாதாரத் துறை சார்பு செயலாளருமான திரு. அம்பாதத் பலாரி அவர்களும், வானிலைப் பிரிவு இயக்குநர் திரு. சங்கர் மனோகர் அவர்களும் கலந்து கொண்டனர். இவ்விழாவினை திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள், உடனிருந்து வழிநடத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய அரசின் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல் யோஜனா திட்டத்தின் கீழ் Kaushal Panjee என்ற இணையதள பதிவேற்ற நிகழ்ச்சியும், அதைத் தொடர்ந்து மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியும் நடைபெற்றது. ■

கிராம ஸ்வராஜ் அபியான் இயக்கத்தின் கீழ் வாழ்வாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு தின விழா

மத்திய அரசு அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாளான 14.04.2018 முதல் 05.05.2018 வரை கிராம சுயாட்சி இயக்கம் என்ற நிகழ்வினை செயல்படுத்தி வருகிறது. இந்தியா முழுவதும் சுமார் 21,000 கிராமங்களைக் கண்டறிந்து, அந்த கிராமங்களில் உள்ள அனைத்து வீடுகளிலும், எரிவாயு இணைப்பு, மின் இணைப்பு, எல்.இ.டி. விளக்குகள் பயன்பாடு, வயது வந்தோர் அனைவருக்கும் பிரதமரின் ஜன்தன் வங்கிக் கணக்கு தொடங்குதல், பிரதமரின் ஜீவன்ஜோதி பீமாயோஜனா (காப்பீடு திட்டம்), சுரக்ஷா யோஜனா திட்டம் மற்றும் 100 விழுக்காடு குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கான நோய்த்தடுப்புத் திட்டமான இந்திர தனுஷ் ஆகிய திட்டங்களை செயல்படுத்தி, நிறைவடைந்த கிராமங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்க பல்வேறு அரசுத் துறைகளையும் பயன்படுத்தி வருகிறது.

தமிழகத்தில் கிராம சுயாட்சி இயக்கத்தின் கீழ் 1477 கிராமங்கள் கண்டறியப்பட்டு, அவைகளை நிறைவடைந்த கிராமங்களாக மாற்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் அனைத்து அரசுத் துறைகளின் சார்பாக அம்பேத்கார் ஜெயந்தி (ஏப்ரல் 14), ஸ்வச் பாரத் நாள் (ஏப்ரல் 18), ஊராட்சிகள் தினம் (ஏப்ரல் 24) போன்ற தினங்களையும் கொண்டாடி வருகிறது. அதன் தொடர்ச்சியாகவும், நிறைவாகவும் 05.05.2018 அன்று வாழ்வாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு தினம் மாநில மற்றும் வட்டார அளவில் கொண்டாடப்பட்டது.

அதன்படி தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 05.05.2018 அன்று சென்னை, ரிப்பன் மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள அம்மா கலையரங்கத்தில் மாநில அளவிலான வாழ்வாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு தின விழா நடைபெற்றது.

கிராமிய கலைநிகழ்ச்சியுடன் துவங்கிய இவ்விழாவிற்கு வருகை தந்த அனைவரையும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்று வரவேற்புரை ஆற்றினார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் இவ்விழாவிற்கு தலைமையேற்று மகளிர் சுய உதவிக் குழுக்களின் பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

தாட்கோ மேலாண் இயக்குநர் திரு. சஜ்ஜன்சிங் ஆர். சவான், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. எஸ். பி. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக செயல் இயக்குநர் திரு. சந்திரசேகர் கில்லி, இ.ஆ.ப.,அவர்கள், மாநில வங்கியாளர் குழுமத் தலைவர் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் செயல் இயக்குநர் திரு. அஜய் குமார் ஸ்ரீவத்சவா அவர்கள், மாநில வங்கியாளர் குழும அமைப்பாளர் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் பொதுமேலாளர் திரு. எம். எம். சாரங்கி அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் செயல் அலுவலர்கள் திரு. பா. செல்வராஜன் அவர்கள், திரு. சி. கே. வீரணன் அவர்கள், மகளிர் திட்ட இணை இயக்குநர்கள், பொது மேலாளர், அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில், 198 மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு வங்கிக் கடன்கள், ஆதார நிதி, சமுதாய முதலீட்டு நிதி, நலிவுற்றோர் தனி நபர் கடன் உதவி என மொத்தம் ரூ. 1 கோடியே 5 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் மற்றும் சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு சான்றிதழ்கள் போன்றவையும் வழங்கப்பட்டதுடன், தீன்தயாள் உபாத்யாய கிராம திறன் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணியாற்றிட பணியாணைகளும், பயிற்சி நிறுவனங்களுக்கு அனுமதி ஆணைகளும் வழங்கப்பட்டன.

விழாவின் சிறப்பம்சமாக தீன்தயாள் உபாத்யாய கிராம திறன் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தொழிற்பயிற்சி பெற்று பணி வாய்ப்பு பெற்றவர்களும், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களும் தங்களின் வெற்றிக் கதைகளை பகிர்ந்து கொண்டனர்.

மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தீன்தயாள் உபாத்தியயா கிராமின் கௌஷல்ய யோஜனா ஆகியவை குறித்த குறும்படங்களும் திரையிடப்பட்டன. கிராமிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

விழாவின் நிறைவாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் செயல் அலுவலர் திரு. ஜா. சம்பத் அவர்கள் நன்றியுரை நல்க விழா இனிதே நிறைவுற்றது. ■

வாழ்வாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு தினக் கொண்டாட்டம்

இந்தியா முழுவதும் சுமார் 21,000 கிராமங்களைக் கண்டறிந்து, அந்த கிராமங்களில் நலத் திட்டங்களை செயல்படுத்தி, நிறைவடைந்த கிராமங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்க மத்திய அரசு பல்வேறு அரசுத் துறைகளையும் பயன்படுத்தி வருகிறது. அதன்படி அகில இந்திய அளவில் 'கிராம சுயராஜ் அபியான்' என்ற கிராம சுயாட்சி இயக்கம் மூலம் 14.04.2018 முதல் 05.05.2018 வரை பல்வேறு நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் தொடர்ச்சியாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 05.05.2018 அன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் வாழ்வாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு தினம் கொண்டாடப்பட்டு, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், தஞ்சாவூர் கூட்டுறவு திருமண மண்டபத்தில் 05.05.2018 அன்று நடைபெற்ற விழாவிலும், ஒரத்தநாடு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமிலும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள் கலந்து கொண்டு, பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வாங்க வங்கிக் கடனுதவி, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன், சமுதாய முதலீட்டு நிதி, சுழல் நிதி, முதியோர் குழுக்களுக்கு ஆதரவு நிதி, நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு தனி நபர் கடனுதவி, தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணைகள் என பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு. அண்ணாதுரை, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில், மாநிலங்களவை உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள், மத்திய கண்காணிப்பு அலுவலர் மற்றும் உள்துறை அமைச்சக செயலாளர் திருமதி. பிரேமா மோகன் அவர்கள், சார்பு செயலாளர் மற்றும் மத்திய நீர்வளக்குழு உறுப்பினர் திரு. கட்டாரியா அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திரு. மந்திராசலம் அவர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. இந்துபாலா அவர்கள், மாவட்ட வேலைவாய்ப்புத் துறை இணை இயக்குநர் திரு. சண்முகசுந்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

பெரம்பலூர் மாவட்டம்

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் பெரம்பலூர், ஜே. கே. மஹாலில் 05.05.2018 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், சிதம்பரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி அவர்களும், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்களும் கலந்து கொண்டு, சிறப்பாக செயல்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் அரசு அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசு ஆகியவற்றை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. தி. ஸ்ரீதர் அவர்கள், பெரம்பலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சு. தேவநாதன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ஆ. அழகிரிசாமி அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கரூர் மாவட்டம்

கரூர் மாவட்டம், நெரூர் வடபாகம் ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 05.05.2018 அன்று கரூர் மாவட்ட ஆட்சியர் திரு. த. அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய அரசு சார்பு செயலாளர் திரு. பி. ஜெ. சவுந்திரராஜன் அவர்கள், கிருஷ்ண ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. எம். கீதா அவர்கள், கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி. எஸ். கவிதா அவர்கள், கரூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கி. அ. சுப்பிரமணியம் அவர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. எம். ரவிச்சந்திரன் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில், கவுசல் பஞ்ச் பதிவுகள், பணி நியமன ஆணைகள் வழங்குதல், தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ■

கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் ஒன்றியத்தில் உள்ள குலசேகரம் ஸ்ரீராமகிருஷ்ணா நேச்ரோபதிக் & யோகா அறிவியல் மருத்துவக் கல்லூரியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 05.05.2018 அன்று நடைபெற்ற கிராம சுயாட்சி இயக்க தின விழாவில் மாண்புமிகு மத்திய நிதி மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் திரு. பொன். இராதாகிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டு, DDU GKY திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகள், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன், தனிநபர் கடன், தொழில் பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ்கள் ஆகியவற்றை வழங்கினார்.

இவ்விழாவில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் மு. வடநேரே, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் / கூடுதல் ஆட்சியர் திரு. ஏ. ஆர். ராஹுல்நாத், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வே. பிச்சை அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

காஞ்சிபுரம் மாவட்டம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 05.05.2018 அன்று நடைபெற்ற கிராம சுயாட்சி இயக்க தின விழாவில் மத்திய தொழிலாளர் நலத்துறையின் சார்பு செயலர் திரு. நவில் கபூர், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணைகள், DDU GKY திட்டத்தின் கீழ் பயிற்சி பெற ஆணை, நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு தனிநபர் கடனுதவி, இலவச எரிவாயு இணைப்பு, ஓட்டுநர் உரிமம் மற்றும் சிறப்பு தொழில் முனைவோர் சான்றிதழ் ஆகியவற்றை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திரு. வை. விஜயகுமார் அவர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜி. ஸ்ரீனிவாசராவ் அவர்கள், முன்னோடி வங்கி மேலாளர் திரு. ஹெப்சூர் ரஹ்மான் அவர்கள் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

ஈரோடு மாவட்டம்

ஈரோடு மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 05.05.2018 அன்று கிராம சுயாட்சி இயக்க தின விழாவினை முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் DDU GKY திட்டத்தின் கீழ் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளில் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் துணை செயலாளர் திரு. வி. ஷில்ஜோ அவர்கள், ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. பாலகணேஷ் அவர்கள், ஈரோடு மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. சீனிவாசன் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

நாகப்பட்டினம் மாவட்டம்

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் கிராம சுயாட்சி இயக்க தின விழா 05.05.2018 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் முனைவர். சீ. சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, DDU GKY திறன் மேம்பாட்டு பயிற்சி விழிப்புணர்வு இரதம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி ஆகியவற்றை துவக்கி வைத்து, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன், இளைஞர்களுக்கு பணி ஆணைகள், பயிற்றுநர்களுக்கு சான்றிதழ் மற்றும் ஆகியவற்றை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி. பி. மதுமதி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

தூத்துக்குடி மாவட்டம்

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் கிராம சுயாட்சி இயக்க தின விழா 05.05.2018 அன்று தூத்துக்குடி சுப்பையா வித்யாலயம் பெண்கள் பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் கலந்து கொண்டு, DDU GKY திட்டத்தின் கீழ் தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணைகள், நலிவுற்றோருக்கு தனிநபர் கடனுதவிகள், பெண்களுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வாங்க கடனுதவி, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி ஆகியவற்றை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு. எஸ். எஸ். தனபதி அவர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள், ஆர்செட் பயிற்சி நிறுவன இயக்குநர் திரு. மு. துரைசாமி அவர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. கே. என். ரவி அவர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

இராமநாதபுரம் மாவட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கிராம சுயாட்சி இயக்க தின விழாவினை முன்னிட்டு 05.05.2018 அன்று மகளிர் சுய உதவிக் குழுவினரின் கலாச்சாரப் போட்டிகள், சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர். எம். மணிகண்டன் அவர்கள் கலந்து கொண்டு சுய உதவிக் குழுவினருக்கு பரிசுகளை வழங்கினார். இராமநாதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் திரு. எஸ். நடராஜன், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. குருநாதன் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், அரசு அலுவலர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ■

மாவட்ட / வட்டார அளவிலான கூட்டமைப்பு பயிற்சிக் கையேடுகள் தயாரித்தலுக்கான கருத்துப்பட்டறை

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக மாவட்ட மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளுக்கான வழிகாட்டி நெறிமுறைகள், விதி முறைகள் மற்றும் நிர்வாகிகளுக்கான பயிற்சிக் கையேடுகள் தயாரித்திடுவதற்கான கருத்துப்பட்டறை 16.04.2018 முதல் 20.04.2018 முடிய திருச்சி டாசோஸ் (TASOS) தொண்டு நிறுவன பயிற்சிக்கூட அரங்கில் நடைபெற்றது. இப்பயிற்சியின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் குறித்து திரு. பாபு (திட்ட அலுவலர், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, திருச்சிராப்பள்ளி மாவட்டம்) அவர்களும், திரு. வி. கிருஷ்ண குமார் (திட்ட நிர்வாகி, மாநில இயக்க மேலாண்மை அலகு) அவர்களும் தெளிவாக எடுத்துக் கூறினார். அதைத் தொடர்ந்து பங்கேற்பாளர்களுடன் வட்டார அளவிலான கூட்டமைப்பு அமைப்பு முறை, அமைப்பு முறையில் மக்கள் பங்கேற்பு எவ்வாறு உறுதி செய்யப்படுதல், வட்டார அளவிலான கூட்டமைப்பு நிலைத்த தன்மையுடன் செயல்படுதல் போன்றவை குறித்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. நிறைவாக இக்கருத்துப் பட்டறையின் மூலம் வடிவமைக்கப்பட்ட வட்டார அளவிலான கூட்டமைப்பின் அமைப்பு முறை மற்றும் அதன் பயன்கள் பற்றி திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஊராட்சியில் 19.04.2018 அன்று பரீட்சார்த்த முறையில் அங்குள்ள சமுதாயம் சார்ந்த அமைப்புகளுடன் வட்டார அளவிலான கூட்டமைப்பு குறித்து கலந்தாய்வு செய்யப்பட்டது. இக்கருத்துப் பட்டறையில் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், களப்பகுதி பணியாளர்கள் மற்றும் மாநில அளவிலான அலுவலர்கள் பங்கு பெற்றனர். பயிற்சியின் நிறைவில் ஈரோடு, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர்கள் கலந்து கொண்டு, வட்டார அளவிலான கூட்டமைப்பு நிலைத்தத் தன்மையுடன் செயல்பட உரிய ஆலோசனைகளை வழங்கினர். இப்பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் திருச்சிராப்பள்ளி மாவட்ட இயக்க மேலாண்மை அலகு ஏற்பாடு செய்திருந்தது. ■

தூத்துக்குடி மாவட்டம்

நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சியில், வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாளினை முன்னிட்டு, 16.04.2018 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியிலும், கோவில்பட்டி லட்சுமி மில் மேல்நிலைப்பள்ளியில், கிராம சுயாட்சி இயக்கம் சார்பில் 18.04.2018 அன்று நடைபெற்ற தூய்மை பாரத நாள் விழாவிலும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் கலந்து கொண்டு, மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுப் பயனாளிகளுக்கு சுழல் நிதி ஆகியவற்றை வழங்கினார். இந்நிகழ்ச்சிகளில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. என். வெங்கடேஷ், இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

திருவள்ளூர் மாவட்டம்

வேலைவாய்ப்பு முகாம்

திருவள்ளூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் கும்மிடிப்பூண்டி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 04.05.2018 அன்று இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரும் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், கும்மிடிப்பூண்டி சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள், திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. ப. கிருஷ்ணம்மாள் அவர்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், பள்ளி தலைமையாசிரியர் அவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், இளைஞர்கள் கலந்து கொண்டனர். ■

திருவள்ளூர் மாவட்டம்

கிராம சுயாட்சி தின விழா

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் கிராம சுயாட்சி தின விழா 05.05.2018 அன்று டி.ஆர்.எஸ். திருமண மண்டத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு, சுழல் நிதி, சமூக மூலதன நிதி, வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணைகள் போன்றவற்றை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. ப. கிருஷ்ணம்மாள் அவர்கள், வட்டாட்சியர் அவர்கள், முன்னோடி வங்கி மேலாளர் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், இளைஞர்கள் கலந்து கொண்டனர். ■

முழு சுகாதார தமிழகம்
முன்னோடி தமிழகம்

மத்திய அரசு செயலாளரின் தமிழ்நாடு வருகை

தமிழ்நாட்டில் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணி விவரங்கள் குறித்து குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சக செயலாளர் திரு. பரமேஸ்வரன் அய்யர், இ.ஆ.ப., அவர்கள் 27.04.2018 மற்றும் 28.04.2018 ஆகிய இரண்டு நாட்கள் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது விழுப்புரம், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் களப்பணிகளை மேற்பார்வையிட்டார்.

பின்பு தலைமை செயலகத்தில் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., அவர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றார். மத்திய குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் இணை செயலாளர் திரு. அருண் பரோகா, இ.ஆ.ப., அவர்களும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் உடன் இருந்தார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநகரத்தின் இயக்குநர் திரு. கே. பாஸ்கரன், இ.ஆ.ப., மற்றும் கூடுதல் இயக்குநர் (சுகாதாரம்) திரு. ஜி. லட்சுமிபதி ஆகியோர் இந்த கலந்தாலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ■

MGNREGS 2016-17
காஞ்சிபுரம் மாவட்டம்
சந்தவேலூர் ஊராட்சி
மதிப்பீடு: ₹12,000/-

களப்பணியின் குரல்கள்

மாண்புமிகு தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள், சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு பேரணியை 28.04.2018 அன்று, தஞ்சாவூர் மாவட்டத்தில் துவக்கி வைத்தார். இந்த விழாவானது கிராம சுயராஜ்ய திட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெற்றது.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் (VPRC) மற்றும் சுய உதவிக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் தங்களது மாவட்டம் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையை அடைந்திட அப்பகுதி மக்களுக்கு சுகாதாரம் மற்றும் தன் சுத்தத்தின் முக்கியத்துவத்தினை வீதி வீதியாகச் சென்று மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யப்பட்டது. இடம் : சத்திரப்பட்டி ஊராட்சி, திருப்பத்தூர் வட்டம், வேலூர் மாவட்டம், நாள்: 28.04.2018

வேலூர் மாவட்டம், திமிரி வட்டத்தில் சுகாதாரம் மற்றும் தன் சுத்தம் குறித்த ஓவியப் போட்டி நடத்தப்பட்டது. அப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு கப்பல் போக்குவரத்து துறை அமைச்சகத்தின் இயக்குநர் திரு. ஜெயசீலன் அவர்கள் பரிசுகளை வழங்கினார். பின்னர் சுகாதாரம் மற்றும் தன் சுத்தம் குறித்து சிறப்புரை ஆற்றினார். நாள்: 28.04.2018

களப்பணியின் குரல்கள்

டாக்டர். மணிகண்டன் அவர்கள் வேகமங்கலம் ஊராட்சியில் உள்ள பெண்கள் மற்றும் தாய்மார்களுக்கு சுகாதாரம் மற்றும் தன் சுத்தத்தின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

இடம் : வேகமங்கலம் ஊராட்சி, காவேரிப்பாக்கம் வட்டம்,
வேலூர் மாவட்டம்,
நாள்: 28.04.2018

தனிநபர் இல்லக் கழிப்பறைகள் மற்றும் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களில் சுவர் ஓவியம் வரைந்து, சுகாதாரத்தின் முக்கியத்துவத்துவம் குறித்து மாவட்டம் முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இம்முயற்சி சுகாதாரக் குழுவின் உதவியோடு செயல்படுத்தப்பட்டது.

இடம் : விருதுநகர் மாவட்டம்,   நாள்: 28.04.2018

களப்பணியின் குரல்கள்

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அவர்கள், கிராம சுயராஜ்ய திட்டத்தின் கீழ் சுகாதாரம் குறித்து ஆலோசனை 27.04.2018 அன்று மேற்கொண்டார். இந்த கூட்டத்தில் சுகாதாரம் சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான துறை தலைவர்களும் பங்கேற்றனர்.

அங்கன்வாடி பணியாளர்கள் சமூக சுகாதார அணுகுமுறையை பயன்படுத்தி எவ்வாறு கழிப்பறை கட்டுமானம் மற்றும் அதன் உபயோகத்தை உறுதிபடுத்துவது என்பது குறித்து பயிற்சி பெற்றனர்.

இடம் : நாகப்பட்டினம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்,
நாள்: 26.04.2018


புது வாழ்வு
வழக்கம்போல் அதிகாலையிலேயே தனது சைக்கிள் கடையைத் திறந்து, வேலையில் அமர்ந்தார் கந்தன்
மாமா... நாங்க கொல்லைக்குப் போனப்ப, மஞ்சுவ எதுவோ கடிச்சிடுச்சி. படுத்துக் கெடக்கா. சீக்கிரம் வீட்டுக்கு வாங்க!
தனது ஒரே மகள் மஞ்சுவுக்கு நேர்ந்ததைக் கேட்ட கந்தன் துடித்துப்போனார்.
என்னங்க... சீக்கிரம் வாங்க! ஆட்டோவ கூப்பிடுங்க.
கத்தாதே... ஒண்ணும் ஆகாது
வா கந்தா... நம்ம அரசு ஆஸ்பத்திரியில எந்நேரமும் ஆள் இருப்பாங்க. அங்கயே போயிடலாம்.
வண்டிய எடு முருகா.
அருகில் இருந்த, மருத்துவமனையுடன்கூடிய அரசு ஆரம்ப சுகாதார மையத்துக்கு மஞ்சுவைக் கொண்டு சென்றார்கள்.
சிறிது நேரம் கழித்து,
குழந்தையைப் பாம்பு கடிச்சிருக்குங்க. பத்திரமா பார்த்துக்கவேண்டாமா?
ஐயையோ... பாம்பா? நான் என்ன செய்வேன்...

கடவுளே... என் மகளுக்கு ஒண்ணும் ஆகக்கூடாது.
கண்ட நேரத்துல புள்ளைய வெளிய அனுப்பாதன்னா கேக்கிறியா, எல்லாம் உன்னாலதான்.
வாயை மூடுய்யா... எல்லாம் உன்னாலதான்.
ஷ்ஷ்... சத்தம் போடக்கூடாது. உள்ள வாங்க... டாக்டரம்மா கூப்பிடுறாங்க.
கடிச்சது சாதாரண ஓலைப் பாம்புதான். பயப்பட ஒண்ணுமில்ல. இதே விஷப்பாம்பா இருந்தா என்ன ஆகியிருக்கும். எதுக்காக குழந்தையைக் கண்டநேரத்துல காட்டுப்பக்கம் அனுப்பறீங்க?
அது வந்து...
எங்க வீட்ல கழிப்பறை வசதி இல்லீங்கம்மா...அதான்...
ஏம்மா, எந்தக்காலத்துல இருக்கீங்க? இப்படித் திறந்தவெளியில போறதால இந்தமாதிரி ஆபத்து மட்டுமில்ல, நோய்த்தொற்றும் வரும் தெரியுமா. அது மட்டுமில்ல, சரியான நேரத்துல போகாம, மலத்தை அடக்குறதால என்னென்ன நோய்ங்க வரும் தெரியுமா?
முதல்ல வீட்டுக்கு ஒரு கழிப்பறை கட்டப் பாருங்க. கழிப்பறைப் பழக்கம்தான் உங்க குழந்தையோட உடல் வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் அறிவு வளர்ச்சியின் அடையாளம்.
சரிங்கம்மா.
அதன்பின், மஞ்சுவைப் பார்த்தார்கள்.
ஆமாப்பா... என் தோழி சுந்தரி வீட்லகூட கழிப்பறை கட்டிட்டாங்க.
அதேமாதிரி நாமளும் கட்டலாம்ப்பா. நீங்க பஞ்சாயத்து ஆபீஸ்ல விசாரிச்சாப் போதும். அவங்களே சொல்லுவாங்களாம்.
கண்டிப்பா இன்னிக்கே விசாரிக்கிறேம்மா. இனிமே நம்ம வீடும் கழிப்பறை உள்ள வீடா மாறிடும் சரியா!
இப்படித்தான் ஆரோக்கியமான, பாதுகாப்பான வாழ்க்கைக்கு மாறினார் கந்தன்.

தினம்... தினம்...

குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் (ஜூன் 12)

ஆண்டுதோறும் ஜூன் 12ஆம் தேதி குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான பன்னாட்டு தொழிலாளர் அமைப்பினால் (ஐ.எல்.ஓ.) அங்கீகரிக்கப்பட்ட இந்த நாள் குழந்தைத் தொழிலாளர்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த 2002ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்படுகிறது. ஐ.எல்.ஓ.வின் 138 மற்றும் 183வது உடன்படிக்கைகளின் ஏற்பினால் தூண்டப்பட்டு இந்த நாள் உருவாக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்த இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது. 2006ஆம் ஆண்டு அக்டோபர் 10ஆம் தேதி முதல் வீடு, சாலையோர கடைகள், உணவகங்கள் போன்ற இடங்களில் சிறுவர் மற்றும் சிறுமியர்களை வேலைக்கு அமர்த்த மத்திய அரசு தடைவிதித்துள்ளது.

குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்

குழந்தைகள் நலனுக்கான சர்வதேச அமைப்பான யுனிசெப் நிறுவனம் குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை உடல் ரீதியான பாதிப்பு, உளவியல் அல்லது மனரீதியான பாதிப்பு மற்றும் உணர்வு மற்றும் சமூக ரீதியான பாதிப்பு என மூன்று வகையாகப் பிரித்துள்ளது.

கவனம் செலுத்தப்பட வேண்டிய அம்சங்கள்

சிறார் அனைவருக்கும் தொடக்கக் கல்வி கட்டாயம் ஆக்கப்பட வேண்டும்

சிறுவர்களின் தொழில் திறமைகளைக் கண்டறிந்து அத்திறமைகளை வளர்க்க பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

பள்ளி மற்றும் கல்லூரிகளில் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல்.

'குழந்தைகள் உங்களுக்குப் பிறந்தவர்கள்தான். ஆனால் உங்களுக்காக மட்டுமே பிறந்தவர்கள் அல்ல' என்பதை பெற்றோர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். ■

உலக தந்தையர் தினம் (ஜூன் 19)

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அன்னையர் தினத்தை முழுமைப்படுத்த, தந்தையர் தின கொண்டாட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. தந்தையர் மற்றும் முன்னோர்களின் நினைவு விழாவாகவும் இந்த நாளில் கொண்டாடப்பட்டு சிறப்பிக்கப்படுகிறது. உலகளவில் இத்தினம் பல்வேறு தேதிகளில் கொண்டாடப்பட்டாலும், முதல் தந்தையர் தினம் ஜூன் 19, 1910 அன்று கொண்டாடப்பட்டதாக தெரிய வருகிறது.

வாஷிங்டனைச் சேர்ந்த சோனரோ ஸ்மார்ட் டோட் என்பவர் 1909ஆம் ஆண்டில் விடுமுறை நாளான ஒரு ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்தில் அன்னையர் தினம் குறித்த போதனையைக் கேட்டுக் கொண்டிருந்தபோது தந்தையர் தினம் கொண்டாடுவது குறித்த எண்ணம் தோன்றியது. ஜூன் 19, 1910 அன்று அவருடைய தந்தைக்காக ஒரு புகழுரையை ஏற்பாடு செய்தார். அதிகாரப்பூர்வமாக தந்தையர் தினத்தை கடைப்பிடித்து அனைத்து தந்தையர்களையும் கௌரவப்படுத்துவதற்கான யோசனையை இவரே முதன் முதலில் பரிந்துரைத்தார். எனினும் இது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு பல ஆண்டுகள் ஆனது.

இருந்தபோதும் YWCAஇல் இருந்த ஆதரவால் YMCA மற்றும் தேவாலயங்கள் போன்ற இடங்களில் இது காலண்டர்களில் இல்லாத போதும் கொண்டாடப்பட்டது. அன்னையர் தினம் மிகுந்த ஆர்வத்துடன் கொண்டாடப்பட்ட போது, தந்தையர் தினம் குதூகலமாய் கொண்டாடப்பட்டது. தவறான காரணங்களுக்காக இதற்கான விடுமுறைகள் மெதுவாக கவனம் பெறத் துவங்கியது.

1913ஆம் ஆண்டில் இதற்கான ஒரு மசோதா அறிவிக்கப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி கல்வின் கூலிட்ஜ் 1924ஆம் ஆண்டில் இத்தினத்திற்கு ஆதரவளித்தார். இதன் விடுமுறையை சட்டமயமாக்குவதற்காக வாணிக அமைப்புகளால் இதற்கான தேசிய செயற்குழு 1930ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 1966ஆம் ஆண்டில் ஜனாதிபதி லிண்டன் ஜான்சன் இதற்கு பெடரல் விடுமுறை அனுசரிக்கப்பட போவதாக பொது அறிவிப்பை வெளியிட்டார்.

தற்போது தந்தையர் தினம் உலகெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இத்தினத்தில் தந்தையருக்கு பரிசுகள் வழங்குதல், விருந்தளித்தல், சிறப்பித்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன. ■

மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாம்களில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணைகளும், மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டம், மேலூர் காஞ்சிவனத்தில் மதுரை மாவட்ட ஆட்சியர் திரு. கொ. வீரராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 05.05.2018 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார் அவர்கள் கலந்து கொண்டு, இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளையும், 231 பயனாளிகளுக்கு ரூ. 1,20,56,900/– மதிப்பிலான நலத் திட்ட உதவிகளையும் வழங்கினார்.

இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் மற்றும் கூடுதல் ஆட்சியர் திரு. எஸ். பி. அம்ரித், இ.ஆ.ப., அவர்கள், மதுரை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. எஸ். எஸ். சரவணன் அவர்கள், பல்வேறு துறை அரசு அலுவலர்கள் மற்றும் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

தேனி மாவட்டம்

தேனி மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் தேனி கம்மவார் கல்வி நிறுவனங்கள் வளாகத்தில் 05.05.2018 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் தமிழகத் தின் பல்வேறு மாவட்டங்களில் செயல்படும் 34 தனியார் நிறுவனங்களும், 516 இளைஞர்களும் கலந்து கொண்டனர். தேனி மாவட்ட ஆட்சியர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு, 129 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளையும், பல்வேறு பயனாளிகளுக்கு ரூ. ஒரு கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், தொழிற்திறன் பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தேனி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

விழுப்புரம் மாவட்டம்

விழுப்புரம் அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 05.05.2018 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் முனைவர். இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, 756 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளையும், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், தொழிற்திறன் பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சு. சுந்தரராஜன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. பிரியா அவர்கள், முன்னோடி வங்கி மேலாளர் திரு. சேதுராமன் அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இம்முகாமில் 61 தனியார் தொழில் நிறுவனங்களும், 3557 இளைஞர்களும் கலந்து கொண்டனர். ■

ஈரோடு மாவட்டம்

ஈரோடு மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் அந்தியூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் 12.04.2018 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கலந்து கொண்டு, பணி வாய்ப்பு பெற்ற 234 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. சீனிவாசன் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், அந்தியூர் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் பல்வேறு தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ■

கொள்ளு – பருப்பு பொடி

தேவையான பொருட்கள்

துவரம் பருப்பு – 4 கப், கொள்ளு – 1/2 கப், மிளகு – 20, மிளகாய் வற்றல் – 10, பெருங்காயம் – 1 சிட்டிகை, உப்பு – 2 டீஸ்பூன்

செய்முறை

வெறும் வாணலியில் கொள்ளுவைப் போட்டி மிதமான தீயில் அது படபடவென வெடிக்கும் வரை நன்கு வறுத்து ஆற வைக்க வேண்டும். அதேபோல் துவரம் பருப்பு, மிளகு, மிளகாய் வற்றல், பெருங்காயம் ஆகியவற்றை மெல்லிய வாசனை வர வறுத்து ஆற வைக்கவும். பிறகு வாணலிச் சூட்டிலேயே உப்பை சற்று வறுத்துக் கொள்ளவும். உப்பை வறுத்து உபயோகிப்பது பொடி நீண்ட நாட்கள் கெடாமல் இருக்க உதவும். வறுத்த அனைத்தையும் மிக்சியில் போட்டு பொடித்து காற்று புகாத டப்பாவில் அடைத்து வைக்கவும்.

உபயோகிக்கும் முறை

இந்தப் பொடியை சூடான சாதத்துடன் சேர்த்துச் சாப்பிடலாம். பயன்படுத்தும் போது பொடியுடன் சிறிது நெய் அல்லது நல்லெண்ணை கலந்து சாப்பிடலாம். சாம்பார், கொள்ளு ரசம், சாம்பார் சாதம் ஆகியவை செய்யும் போது இந்தப் பொடியை சிறிது சேர்த்து கொதிக்க விடலாம். பருப்பின் புரதச் சத்தும், கொள்ளுவின் நன்மைகளும் கலந்த 'கொள்ளு பருப்புப் பொடி' சுவையும் ஆரோக்கியமும் மிகுந்தது. ■

சீதாப்பழம்

கஸ்டர்டு ஆப்பிள் என்றும் பட்டர் ஆப்பிள் என்றும் ஆங்கிலத்தில் அழைக்கப்படும் சீதாப்பழம் சுவைமிகுந்த இனிய பழமாகும். குளுகோஸ் வடிவில் நிறைந்த அளவு சர்க்கரைச் சத்தைக் கொண்டிருக்கும் இப்பழம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பப்படுகிறது.

வெப்பம் மிகுந்த பகுதிகளில் எளிதாக வளரும சீதா சிறு மர வகையைச் சார்ந்தது. தனிப்பட்ட மணமும், சுவையும் கொண்ட இப்பழத்தின் தோல், விதை, இலை, மரப்பட்டை அனைத்துமே மருத்துவப் பண்புகளைக் கொண்டது. நீர்ச்சத்து அதிக மாக உள்ள சீதாப்பழத்தில், மாவுச் சத்து, புரதம், கொழுப்பு, தாது உப்புகள், நார்ச்சத்து, சுண்ணாம்புச் சத்து, பாஸ்பரஸ், இரும்புச் சத்து போன்றவை அடங்கியுள்ளன.

சீதாப்பழத்தை உண்ண செரிமானம் ஏற்படும். மலச்சிக்கல் நீங்கும். இலைகளை அரைத்து புண்கள் மேல் பூசி வந்தால் புண்கள் ஆறும். குழந்தைகளுக்கு இப்பழத்தை சாப்பிடக் கொடுத்தால் எலும்புகளும் பற்களும் உறுதியாகும். சீதாப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இதயம் பலப்படுவதுடன் காசநோயும் மட்டுப்படும். குளிர் மற்றும் காய்ச்சலையும் கட்டுப்படுத்தும்.

சீதாப்பழ விதைகளை காய வைத்து அரைத்து வைத்துக் கொள்ளவும், சிறிதளவு வெந்தயம், சிறு பயிறு ஆகிய இரண்டையும் சேர்த்து இரவு முழுவதும் ஊற வைத்து பின்னர் காலையில் சேர்த்து அரைத்து, இதனுடன் சிறிதளவு சீதாப்பழ பொடியையும் கலந்து தலையில் தேய்த்து ஊறிய பின்னர் குளித்து வர தலை குளிர்ச்சி பெறும். முடியும் உதிராது. பொடுகு தொல்லையும் நீங்கும். சீயக்காய் அரைக்கும் போது சிறிதளவு சீதாப்பழ விதைகளையும் சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு வாரம் ஒருமுறை தலைக்கு தேய்த்து குளித்து வர பேன் தொல்லை ஒழியும். ■

அழகுக் குறிப்புகள்

அழகாகத் தோன்ற வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாகும். செயற்கைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் அழகுப் பொருட்கள் பக்க விளைவுகளை ஏற்படுத்தும். ஆனால் இயற்கைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் அழகுப் பொருட்களால் என்றும் பாதிப்பில்லை.

சோற்றுக் கற்றாழையின் நடுப்பகுதியைப் பிளந்து, அதன் கசப்பான சாற்றை மோரில் கலந்து தினந்தோறும் சாப்பிட்டு வந்தால் அல்சர் போன்ற நோய்கள் குணமாகும். மேலும் உடலில் இளமைத் தன்மை அதிகரிக்கும்.

செம்பருத்திப் பூவைக் காய வைத்து தூளாக்கி தலையில் சீயக்காய் போலத் தேய்த்துக் குளித்து வந்தால், பொடுகுத் தொல்லை தீரும். நன்கு தலைமுடி வளருவதுடன், முடி கொட்டுவதும் நின்று விடும். மேலும் கண்களுக்கும் உடலுக்கும் குளிர்ச்சி தரும்.

வாழைப்பழத்தை மசித்து பால் கலந்து முகத்தில் பூசி, சில நிமிடங்கள் கழித்து தண்ணீரால் கழுவினால் முகம் பொலிவுடன் காணப்படும்.

ஆரஞ்சு பழத்தோலை வெயிலில் காய வைத்து பொடி செய்து பாலுடன் கலந்து சருமத்தில் தடவி அரைமணி நேரம் கழித்து கழுவி வந்தால், வெயிலில் ஏற்பட்ட கருமை மறையும்.

வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காய வைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி, 20 நிமிடம் ஊறியபின் குளித்தால், வெயிலில் கருத்துப் போன முகம் பொலிவடையும். ■

சிவகங்கை மாவட்டம்

மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. க. லதா, இ.ஆ.ப., அவர்கள் 19.04.2018 அன்று மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டார். முதற்கட்டமாக மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், கல்குறிச்சி ஊராட்சியில் செயல்பட்டு வரும் மட்பாண்டம் செய்யும் ஒத்தத் தொழில் குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் செயல்பாடுகளை பார்வையிடப்பட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் அவர்கள், கூட்டமைப்பு மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றின் மூலம் தனிநபர் கடன் பெற்று மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில் களையும் பார்வையிட்டு, கடன் பெற்றவர்களின் பொருளாதார முன்னேற்றம் குறித்த விபரங்களைக் கேட்டறிந்ததுடன், மேலப்பசலை கிராமத்தில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் செயல்படும் செங்கல் சூளை அலகினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த நிகழ்வுகளின் போது, சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. க. இளங்கோ அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் திரு. கே. எஸ். வீரபாகு, திருமதி. கே. விஜயசங்கரி, திரு. எ. விசுவாசம் டென்னிஸ் ராஜ் ஆகியோர் உடனிருந்தனர். ■

சிறப்பு கிராம சபைக் கூட்டம்

கிராம சுயராஜ் அபியான் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கொட்டக்குடி கீழ்பாத்தி ஊராட்சியில் நடைபெற்ற சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் தேசிய கண்காணிப்பு அலுவலர் திருமதி. நிர்மலா, இ.ஆ.ப., அவர்கள், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. க. லதா, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. து. இளங்கோ அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திரு. வடிவேல் அவர்கள், சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. க. இளங்கோ அவர்கள், மாநில நிதி உள்ளாக்க உயர் ஆலோசகர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

நிதி உள்ளாக்கம் மற்றும் நிதிசார் கல்வி தொடர்பான பயிற்சி

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாளர்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள் மற்றும் பொது சேவை மைய கணினி இயக்குநர்கள் ஆகியோருக்கு மகளிர் சுய உதவிக் குழு கடன் இணைப்பு விபரத்தினை தேசிய ஊரக வாழ்வாதார இயக்க இணைய தளத்தில் மின்னணு முறையில் பதிவேற்றம் செய்வது தொடர்பான நிதி உள்ளாக்கம் மற்றும் நிதிசார் கல்வி தொடர்பான பயிற்சி 24.04.2018 அன்று சிவகங்கை மாவட்ட மகளிர் திட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் மாநில நிதி உள்ளாக்க உயர் ஆலோசகர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் கலந்து கொண்டு, மகளிர் சுய உதவிக் குழு கடன் இணைப்பினை இணைய தளத்தில் மின்னணு முறையில் பதிவேற்றம் செய்வது, வட்டி மானியத் திட்டம் மற்றும் பயிற்சி தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார். இப்பயிற்சியின்போது, சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. க. இளங்கோ அவர்கள், முன்னோடி வங்கி மேலாளர் திரு. முருகேசன் அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர். ■

கன்னியாகுமரி மாவட்டம்

வட்டார இ–சேவை மையத்தின் மூலம் வாழ்வாதாரம் உயர்ந்த வெற்றிக் கதை

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், முழுக்கோடு கிராமத்தில் வசித்து வருபவர் திருமதி. த. ஜெபந்தா (வயது 29). மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் 10ஆம் வகுப்பு வரை பள்ளியில் படித்து விட்டு, தொலைதூரக் கல்வி முறையில் 12ஆம் வகுப்பு, Computer (COA), PGDCA, Typewritting Tamil & English படித்துள்ளார். இவரின் கணவர் கூலி வேலைக்குச் செல்பவர். இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர்.

இவர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளதுடன், மாற்றுத் திறனாளி பயிற்றுநராகவும் உள்ளதால் மாற்றுத் திறனாளிகளைக் கண்டறிந்து அவர்களை குழுவாக ஒருங்கிணைத்து, அவர்களுக்கு வங்கிக் கடன் போன்றவை பெற்றுத் தரும் பணியில் ஈடுபட்டு வந்தார். போதிய வருவாய் இல்லாமல் சிரமப்பட்டு வந்த நிலையில், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இ–சேவை மைய கணினி இயக்குபவர் பணிக்கு பணியாளர் தேவை என்பதை அறிந்து, அப்பணிக்கு விண்ணப்பித்து மேல்புறம் ஊராட்சி ஒன்றிய இ–சேவை மையத்தில் பணிக்கு சேர்ந்தார்.

ஆரம்பத்தில் போதுமான வருவாய் இல்லாமல் சிரமப்பட்டார். பின்னர் படிப்படியாக இ–சேவை மையம் நன்றாக செயல்படத் துவங்கியது. தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ. 15 ஆயிரம் வரை வருவாய் பெற்று வரும் திருமதி. ஜெபந்தா, தனது குடும்பத்தின் வறுமை நீங்க வருவாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றிற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார். ■

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட
உங்களின் ஆதரவை தாருங்கள்! முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180/–
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360/–
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540/–

விளம்பரக் கட்டணம்

அட்டையில்	ரூ. 75,000/–
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 50,000/–
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 50,000/–
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/–
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/–

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்

திரு. ஏ. ஆர். கிளாட்ஸ்டன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

10வது கூட்டு ஆய்வுக் குழு

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்ய கடந்த 23.04.2018 அன்று முதல் 04.05.2018 வரை பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் 10வது கூட்டுப் பொறுப்புக் குழுவினர் ரோம் மற்றும் புதுடெல்லியில் இருந்து வருகை புரிந்தனர். இக்குழுவின் தலைவி ஓமர்ராஷா தலைமையில், திரு. ஸ்ரீராம், திருமதி. கிரிஜா சீனிவாசன், திரு. ரிச்சர்ட் எபில்லா, திரு. வின்செனட் டர்லாங் மற்றும் திரு. பிரதுல் துபே ஆகியோர் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களுக்கு மூன்று குழுக்களாக பிரிந்து ஒவ்வொரு குழுவும் நான்கு மாவட்டங்கள் வீதம் களப்பயணம் மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின் போது கூட்டமைப்புகளின் செயல்பாடுகள், கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலம் செயல்படுத்தப்படும் குறுந்தொழில்கள், வாழ்வாதார நடவடிக்கைகள், சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள், மீன் விற்பனை சங்கங்கள் மற்றும் மாவட்ட மீனவ சங்க சம்மேளனங்களின் செயல்பாடுகள், தலைச்சுமை மீன் வியாபாரப் பெண்களுக் கான கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் செயல்பாடுகள், சிறப்புத் திட்டங்களான CCD, Hand in Hand மற்றும் மாவட்ட செயலர்களின் பணித்திறன் ஆய்வு ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொண்டனர். கூட்டமைப்புகளின் திறன் வளர்ந்து வரும் நிலைமை மற்றும் நிலைத்த தன்மையை கொண்டு வருவதற்கு குறைந்தபட்சம் ரூ. இரண்டு இலட்சம் வருவாய் ஈட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளதை ஆய்வு செய்தனர். மேலும் செயல்படாமல் முடங்கி இருக்கும் சில குழுக்களை அடையாளம் கண்டுபிடித்து வங்கிக் கடன் பெற்று தரப்பட்டதையும் ஆய்வு செய்தனர்.

கள ஆய்வினை முடித்துக் கொண்டு 01.05.2018 அன்று தலைமையிடம் திரும்பிய பின்னர், நபார்ட் நிதியம், டேலி, காப்பீட்டு நிறுவனம் மற்றும் 12 மாவட்டங்களின் மாவட்ட செயலாக்க அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்களிடம் திட்டத்தின் செயல் பாடுகள் குறித்த வரைவு அறிக்கையை இறுதி செய்தனர்.

04.05.2018 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களிடம், இறுதி செய்யப்பட்ட வரைவு அறிக்கையினை சமர்ப்பித்தனர். அப்போது, கூடுதல் செயலர் திருமதி. சுகந்தி, இ.ஆ.ப., அவர்கள், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ் அவர்கள் மற்றும் திட்ட மேலாண்மை அலகின் மேலாளர்கள் உடனிருந்தனர்.

சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் சிறப்பாகவும் திருப்திகரமாகவும் செயல்படுவதாக தெரிவித்து (Project Satisfactory) என மதிப்பிட்டு அறிவித்துள்ளனர். ■

Rural Development & Panchayat Raj Department
Post Tsunami Sustainable Livelihood Programme 10th Joint Review Mission wrap-up Meeting – 04.05.2018

[L - R] R.Ravichandran, C & IT Manager, Mr.M.Rajasekaran, F & A Manager, Mr.C.L.Chenthil Kumar, M & E Manager, Mr.Sankarasubramaniam Sriram, Associate Country Programme Officer, IFAD ICO, New Delhi, Ms.Girija Srinivasan, IFAD Consultant, Ms.Rasha Omar, Country Representative, IFAD, New Delhi, Mr.Richard Abila, Fisheries Specialist, IFAD, Rome, Mr Hans Raj Verma I.A.S, Additional Chief Secretary, Rural Development & Panchayat Raj Department, Mr.VincentDarlong, IFAD Consultant, Ms Suganthi I.A.S, Additional Secretary, Rural Development & Panchayat Raj Department, Thiru.A.R.Gladstone Pushparaj, Additional Project Director, Ms. Shanthi Swaminathan, EDM, Ms.D.EzhilKavitha, Executive Engineer and Mr. M.Padmanabhan, SRFM.

கோரைமேட் தயாரிப்பு கூட்டுப் பொறுப்புக் குழு

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு பகுதி வள மையத்திற்குட்பட்ட பழவேற்காடு ஊராட்சியில் ரஹ்மத் குழு சுமார் 11 வருடங்களாக செயல்பட்டு வருகிறது. இந்தக் கிராமம் முழுக்க இஸ்லாமிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே வசித்து வருகின்றனர். இவர்களுக்கென ஒரு தனி கட்டுப்பாடுகளைக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். பெண்களை ஒருபோதும் வேலைக்காக வெளியில் செல்ல அனு மதிக்க மாட்டார்கள். இவர்கள் கோரை தாள்களின் மூலம் கோரைப் பாய் நெய்வதில் அனுபவம் பெற்றிருந்தனர். இவர்களுக்கென சில இடங்களில் கடன் கிடைத்த போதிலும் அதிக வட்டி என்பதால் இலாபம் மொத்தமும் வட்டி செலுத்தவே சரியாக இருந்தது. இதற்கிடையில் இக்குழுவின் உறுப்பினர்கள் கூட்டமைப்பின் அரையாண்டுத் திட்டமிடல் ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று கூட்டுப் பொறுப்புக் குழு பற்றி அறிந்து கொண்டனர். அவர்களில் ஆயிஷா பீபி, ஜீபைத்தா, கரிமுனிஷா, மெகர்பானு மற்றும் கரிமா பீவி ஆகியோர் இணைந்து பகுதி வள மைய தொழில் ஊக்குநர் வழிகாட்டுதலின்படி கூட்டுப் பொறுப்புக் குழுவை உருவாக்கினார்கள்.

இந்தக் கூட்டுப் பொறுப்புக் குழு, நாபின்ஸ் நிதி நிறுவனத்தின் மூலம் ரூ. 1,05,000/– உறுப்பினர்கள் பங்குத் தொகை ரூ. 7,500/– + ரூ. 37,500/– என மொத்தம் ரூ. 1,50,000/– கடன் தொகை 30.04.2017ல் பெறப்பட்டு தொழில் துவங்கப்பட்டது. இதில் உறுப்பினர்களின் கணவர்களின் பங்கு மிக முக்கியமானது. ஏனென்றால் கோரை பாய் நெய்வது மட்டுமே பெண்கள். இவர்களின் கணவர்கள் மோட்டார் சைக்கிளில் ஊர் ஊராகச் சென்று பாய்களை விற்பனை செய்கின்றனர். விற்பனையின் மூலம் கிடைக்கும் வருவாயில் கடன் தொகையை முன்னதாகவே முழுமையாக திரும்பச் செலுத்தி விட்டனர். பின்னர் இரண்டாவது கடன் தொகை வேண்டி விண்ணப்பித்தனர். அதன்படி குழு தரமதிப்பீடு செய்யப்பட்டு, பல்லவன் வங்கியின் மூலமாக ரூ. 5,00,000/– கடன் தொகை 12.09.2017 பெறப்பட்டு, மேலும் சிறப்பாக தங்களின் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் கோரைப்பாய் நெய்யும் தொழில் மூலமாக மாதம் ரூ. 4000/– வரை ஒவ்வொரு உறுப்பினரும் வருவாய் ஈட்டி வருகின்றனர். தங்களுக்கு வருவாய் ஈட்டும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத்திற்கு நன்றி தெரித்துக் கொள்கின்றனர் இக்குழுவின் உறுப்பினர்கள். ■

ஆடு வளர்ப்புத் தொழிலின் மூலம் வாழ்வாதாரம் பெற்ற பயனாளி

காஞ்சிபுரம் மாவட்டம், வாயலூர் ஊராட்சியில் வசிப்பவர் திருமதி. கோமதி. இவர் இப்பகுதியில் உள்ள விடியல் சுய உதவிக் குழுவில் கடந்த 8 வருடங்களாக உறுப்பினராக உள்ளார். இவரின் கணவர் இறந்து விட்டதால், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சிறப்பு கடன் திட்டத்தின் (IGA) மூலம் 19.08.2017 அன்று இவருக்கு ரூ. 10,000/– கடன் கிடைத்தது. அந்தத் தொகையைக் கொண்டு, மூன்று ஆடுகள் வாங்கி வளர்த்து வந்தார். இதன் மூலம் தற்போது 15 ஆடுகள் உள்ளன. இதனை அவ்வப்போது விற்று கூடுதல் குடும்பச் செலவிற்கு பயன்படுத்தி வருகிறார். ஆறு மாதத்திற்கு ஒருமுறை சராசரியாக ரூ. 6000/– கிடைத்து வருகிறது. தற்போது 8 மாத கடன் தொகையை நிலுவை இன்றி திரும்பச் செலுத்தி விட்டார். இவருக்கு இந்தக் கடன் கிடைக்காவிட்டால் தான் அதிக வட்டிக்கு வெளிநபரிடம் கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். தனக்கு கடன் கொடுத்து உதவிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத்திற்கு நன்றி தெரித்துக் கொள்கிறார் திரு. கோமதி. ■

காப்பீட்டுத் திட்டத்தின் பயன்



விழுப்புரம் மாவட்டம், பனிச்சமேடு ஊராட்சியில் கெங்கையம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினரான திருமதி. எம். ரேணுகா, UIIC நிறுவனத்தில் மருத்துவக் காப்பீடு திட்டத்தில் ரூ. 250/– பிரீமியம் செலுத்தி காப்பீட்டில் இணைந்தார். இவரின் கணவர் திரு. முருகன் (வயது 36) மோட்டார் வாகனத்தில் செல்லும் போது, காலில் அடிபட்டு PIMS மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை பெற்று வந்தார். பிறகு சிகிச்சை பெற்றதற்கான ரசீதுகளை கூட்டமைப்பில் அளித்து காப்பீடு தோழி மூலம் காப்பீடு இழப்பீட்டுத் தொகை UIIC நிறுவனத்திடமிருந்து, ரூ. 6204/– காசோலையாக வழங்கப்பட்டு, இழப்பீட்டுத் தொகை பெற்றார்.

மேற்படி காப்பீடு திட்டத்தில் சேராவிட்டால் காப்பீடு திட்டத்தின் பயனை தாங்கள் அடைந்திருக்க வாய்ப்பு இல்லை என்றும், தங்களுக்கு இந்த இழப்பீட்டுத் தொகை மிகவும் உதவியாக இருந்தது என்றும் கூறி, இழப்பீட்டுத் தொகை பெற்றுத் தந்த சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறார் ரேணுகா. ■

கூட்டுப் பொறுப்புக் குழு மூலம் பயன் பெற்ற வெற்றிக் கதை

கடலூர் மாவட்டத்தில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தி வரும் சிங்கிரிக்குடி ஊராட்சி பனித்துளி கூட்டுப் பொறுப்புக் குழுவின் செயலாளர் திருமதி. காமாட்சி கூட்டுப் பொறுப்புக் குழு மூலம் கறவை மாடு வாங்கக் கடன் பெற்று வளர்ச்சி அடைந்த வழிகளை எடுத்துரைக்கிறார்.

எங்களது பனித்துளி கூட்டுப் பொறுப்புக் குழுவில் ஒருமித்த கருத்துடைய ஐந்து உறுப்பினர்களை அடையாளம் கண்டு கூட்டுப் பொறுப்புக் குழுவினை உருவாக்கினோம். எங்கள் குழுவில் அனைவரும் கறவை மாடு வளர்ப்புத் தொழில் அனுபவம் பெற்றிருந்ததால், ஒருவருக்கு 2 கறவை மாடுகள் வீதம் ரூ. 4,00,000/– என மதிப்பீடு செய்து, எங்களுடைய பங்களிப்பு ரூ. 20,000/–ம் நபார்டு நுண்கடன் ரூ. 2,80,000/–ம் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டக் கடனாக ரூ. 1,00,000/–ம் ஆக மொத்தம் ரூ. 3,80,000/– என கணக்கீடு செய்யப்பட்டு கடன் தொகை வழங்கப்பட்டது.

அந்தக் கடன் தொகையில் கறவை மாடுகள் வாங்கி தனி நபர்களிடம் பால் விற்பனை செய்தோம். அதில் ஈட்டிய வருவாயைக் கொண்டு, கடனை திருப்பி செலுத்தினோம். மேலும் இதில் கிடைத்த மிகை வருமானம் குடும்ப பராமரிப்பிற்கும், கல்விச் செலவிற்கும் என இந்தப் பணம் உபயோகமாக இருந்தது. மேலும் தற்போது உறுப்பினர்கள் அனைவரும் மாடுகளின் எண்ணிக்கையினை 4 என்ற அளவிற்கு அதிகரித்து மேலும் வருவாயை பெருக்கிட வழிவகை செய்து வருகின்றோம்.

எங்களுடைய நிலைத்த வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், வருவாயை பெருக்கிடவும், கறவை மாடு தொழில் கடனை ஏற்படுத்திக் கொடுத்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தை என்றென்றும் மறக்க முடியாது. இம்மாதிரியான வாழ்வாதாரக் கடன் வழங்காமல் இருந்திருந்தால் நாங்கள் நிலையற்ற கூலி வேலைகளை செய்து வாழ்வாதாரத்தில் பின்தங்கியிருந்திருப்போம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ■

கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலம் கடன் பெற்று தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொண்ட மகளிரின் கூற்று

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் நாள் ஏற்பட்ட சுனாமி பேரலையால் மிகவும் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் மாவட்டத்தில், தமிழக அரசின் மூலம் ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டமானது நாகப்பட்டினத்தை மையமாகக் கொண்டு 29 கடலோர ஊராட்சிகளில் வாழ்வாதார மேம்பாடு பணிகள் பலவற்றை மேற்கொண்டு வருகிறது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டம் மற்றும் நாபின்ஸ் நிதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, கூட்டுப் பொறுப்புக் குழு (JLC) மூலம் குறுந்தொழில் செய்ய கடன் வழங்கி வருகின்றது.

அதில் திருப்பூண்டி கிழக்கு ஊராட்சியில் காய்கறி சாகுபடி செய்வதற்கு செவ்வந்தி கூட்டுப் பொறுப்புக் குழுவிற்கு கடன் வழங்கப்பட்டு, சிறப்பாக முறையில் தொழில் நடைபெற்று வருகிறது. இத்தொழிலுக்கான நிதி நாபின்ஸ் நிதி நிறுவனத்தின் மூலம் 70% ஆக ரூ. 1,11,150/–மும், சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டம் மூலம் 25% ஆக ரூ. 37,050/–ம் மற்றும் பயனாளி பங்களிப்பு தொகையாக 5% என ரூ. 7800/–மும் என தொகை விடுவிக்கப்பட்டு, பகவதி, அஞ்சம்மாள், தமிழரசி ஆகிய மூன்று பயனாளிகள் மூலம் 29.05.2014 அன்று தொழில் தொடங்கப்பட்டது. தற்போது அந்தப் பயனாளிகள் காய்கறி உற்பத்தி தொழில் ஈடுபட்டு மிகச் சிறப்பாக வருமானம் ஈட்டி வருகின்றனர். குறிப்பாக ஒவ்வொரு நபரும் மாதத்திற்கு ரூ. 8,000/– வருமானமாக தனது தொழிலின் மூலம் ஈட்டி வருகின்றனர்.

இதுவரையில் மூன்று நபர்களும் சேர்ந்து நபார்டு நிதி நிறுவனத்திற்கு கடன் தொகையினை முழுமையாகத் திரும்பச் செலுத்தியுள்ளனர். மேலும் புதிதாக 5 நபர்கள் இணைந்து மீண்டும் கடன் பெறுவதற்கு விண்ணப்பித்து கடன் பெறுவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலம் கடன் பெற்று தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொண்டதோடு, மீண்டும் 5 நபர்கள் இணைந்து தொழில் செய்ய மிகவும் ஆர்வமாக இருப்பதாக தெரிவிக்கிறார்கள். ■

மீமிசல் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பு ஒரு பார்வை

புதுக்கோட்டை மாவட்டத்தில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களின் ஊக்குனர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சிகள் (Animator & Representative Training) 14 ஊராட்சிகளிலும் நடத்தத் திட்டமிடப்பட்டது. அதன் ஒரு பகுதியாக மீமிசல் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பின் கீழ் உள்ள 29 மகளிர் சுய உதவிக் குழு பொறுப்பாளர்களான ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டு அதன் செயலாளர் ஆனந்தி கூறுகையில், 'எங்களது கூட்டமைப்பானது இறுதியாக 2010ல் பதிவு செய்யப்பட்டது என்றும், அதன் பிறகு எந்த ஒரு தொண்டு நிறுவனமோ, அரசுத் துறையோ எங்களை வழிநடத்த எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்றும், சுமார் 8 வருடங்களுக்குப் பிறகு சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக குழுக்களின் ஊக்குனர், பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, தற்போது 29 குழுக்களும் முறையாக செயல்பட ஆரம்பித்துள்ளோம். மேலும் குழு கணக்குகளை முறைப்படுத்திட பேரேடுகள் வழங்கப்பட்டுள்ளதால் குழுக்களை மேலும் வலுப்படுத்திட ஏதுவாக உள்ளது. மீமிசல் ஊராட்சி கூட்டமைப்பை மறுபதிவு செய்தவுடன் இந்தியன் வங்கி மூலம் கடன் பெற்று, கூட்டமைப்பை சிறப்பாக கொண்டு செல்ல முனைப்போடு நாங்கள் இருக்கிறோம். கூட்டமைப்பு வலுப்பெற தேவையான நடவடிக்கைகள் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது' என்றும் குறிப்பிட்டார். ■

ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்களுக்கான மூன்று நாட்கள் புத்தாக்கப் பயிற்சி

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் சிறப்பாக செயல்படும் 30 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்களுக்கான 3 நாட்கள் புத்தாக்கப் பயிற்சி 26.04.2018 முதல் 28.04.2018 வரை நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் குறித்தும், திட்டத்தின் நோக்கங்கள், ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புகளை சிறப்பாக செயல்படுத்துவது குறித்தும், குடியிருப்பு மன்றம் அமைத்தல் தொடர்பாகவும், செயற்குழு உறுப்பினர்களின் பணிகள், கூட்டமைப்பின் நிர்வாகிகளின் பொறுப்புகள் மற்றும் கடமைகள், பதிவேடுகள் பராமரித்தல், கூட்டமைப்பின் சட்டப்பூர்மான கடமைகள், தணிக்கைக்கு சமர்ப்பிக்கும் ஆவணங்கள், கூட்டமைப்பின் நிதி மேலாண்மை, சுய உதவிக் குழுவின் கடன் திட்டங்கள், கூட்டமைப்பின் கடன் திட்டங்கள், கூட்டமைப்பின் நிலைத்தத்தன்மை மற்றும் தரம் பிரித்தல், காப்பீட்டின் அவசியம், துயர் குறைப்பு நிதியின் பயன்பாடு, கூட்டுப் பொறுப்புக் குழுவின் நன்மைகள், தன் சுத்தம், நோய் தடுப்பு முறை போன்றவை குறித்தும் செயற்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

மேலும் இப்பயிற்சியினை கண்காணிக்க மாவட்ட செயலாக்க அலுவலர் திருமதி. வ. சார்லெட் மேரி தலைமையில் குழு அமைத்து, அனைத்து பயிற்சிகளும் சிறப்பாகக் கண்காணிக்கப்பட்டது. ■

பாரதம் கூட்டுப் பொறுப்புக் குழு

கடற்கரையோரக் கிராமங்களில் வாழும் பெண்கள் மீன்பிடித் தொழிலை மட்டும் நம்பியிராமல், அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்பாடுத்தும் நோக்கில் வருவாய் தரக்கூடிய தொழில்களில் ஈடுபடச் செய்து, ஒவ்வொரு குடும்பத்தின் வருவாய் ஆதாரத்தை உயர்த்த கூட்டுப் பொறுப்புக் குழு ஏற்படுத்தப்பட்டு, அக்குழுவிற்கு சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் நுண்தொழிலில் ஈடுபட வங்கியில் கடன் பெற்றுத் தரப்படுகிறது.

ஒரு சுய உதவிக் குழுவிலிருந்து ஒத்தக் கருத்து மற்றும் தொழில் செய்யும் 5 மகளிர் கொண்ட ஒரு கூட்டுப் பொறுப்புக் குழுவாக ஏற்படுத்தி, நுண்தொழில் வளர்ச்சிக்கு ரூபாய் 3 இலட்சம் வரை 5 நபர்கள் கொண்ட ஒரு மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுவிற்கு நுண்தொழில் கடன், தகுதியின் அடிப்படையில் நாபின்ஸ் நிறுவனம் மூலம் பெற்றுத் தரப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டம் தம்பிக்கோட்டை வடகாடு ஊராட்சியைச் சேர்ந்த திருமதி. ரேவதி என்பவரை செயலாளராகக் கொண்டு, பாரதம் கூட்டுப் பொறுப்புக் குழு மண்பாண்டம் செய்தல் தொழில் செய்து வருகிறது. இதுகுறித்து திருமதி. ரேவதி நம்மிடம் கூறும்போது, 'நாபின்ஸ் மூலம் ரூ. 1,05,000/– பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியம் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைவத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் ரூ. 37,500/– மற்றும் குழுவின் பங்களிப்பாக ரூ. 7500/– என மொத்தம் ரூ. 1,50,000/– பெற்று இத்தொழிலைச் செய்து வருகிறோம். கடன் உதவி கிடைத்ததால் அதிக அளவில் மண்பாண்டங்கள் உற்பத்தி செய்வதோடு, புதிய புதிய ரகங்களில் மண்பாண்டங்கள் உற்பத்தி செய்து வாடிக்கையாளர்களைக் கவர்ந்து, அதிக அளவில் விற்பனை செய்து நல்ல இலாபம் சம்பாதிக்கின்றோம். எங்கள் குழுவின் வருமானம் இரட்டிப்பாகியுள்ளது. அருகிலுள்ள பகுதிகளுக்கு வாகனம் மூலம் எடுத்துச் சென்று விற்பனை செய்து வருகின்றோம்.

எங்களது மண்பாண்டம் செய்தல் தொழில் கிழக்கு கடற்கரைச் சாலையில் அமைந்துள்ளதால் விற்பனைக்கு கூடுதல் வாய்ப்பு கிடைத்துள்ளது. சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு எங்கள் கூட்டுப் பொறுப்புக் குழு நன்றி கடன்பட்டுள்ளது' என திருமதி. ரேவதி தெரிவித்தார். ■

ஐயப்பன் கூட்டுப் பொறுப்புக் குழு

கோகுல கண்ணன் மகளிர் சுய உதவிக் குழுவினர் தங்களின் வெற்றி குறித்து கூறும்போது, "எங்கள் குழு கடந்த இரண்டு ஆண்டுகளாக எந்த ஒரு தொழில் கடனும் பெற்றது இல்லை. ஆனால் தற்போது வேளாண்மை வளர்ச்சி நிதி உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் தொழில் கடன் குறைந்த வட்டியில் வழங்கப்படுகிறது.

பின்பு தொழில் செய்யக்கூடிய அனைத்து மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை வைத்து மையக் கூட்டம் நடைபெற்றது. இதில் வேளாண்மை வளர்ச்சி நிதி உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைப்பதற்கான விதிமுறைகள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. பின்பு ஐயப்பன் கூட்டுப் பொறுப்புக் குழு அமைத்து, பங்குத் தொகை 5% செலுத்தியுள்ளோம். அதன் பின்பு வங்கிக் கடன் நாபின்ஸ் நிறுவனத்திடமிருந்து ரூ. 2,85,000 மற்றும் பங்குத் தொகை ரூ. 15,000/- என ரூ. 3,00,000/- கடன் தொகை எடுத்து தொழில் செய்ய ஆரம்பித்தோம்.

எங்கள் குக்கிராமத்தில் மல்லிகை பதியம் சிறப்பான தொழில் ஆகையால் தொழில் திட்டத்தின்படி குத்தகைக்கு நிலம் எடுத்து மல்லிகை பதியம் தொழில் செய்து கொண்டிருக்கிறோம்.

இதற்குமுன் இடைத்தரகர்கள் மூலம் முன்பணம் பெற்று பின்னர் குறைந்த விலைக்கு அதாவது ஒரு பண்டலுக்கு ரூ. 1150/- முதல் ரூ. 1350/- வரைக்கு கொடுத்து வந்தோம். தற்போது இக்கூட்டுப் பொறுப்புக் குழு கடன் பெற்றமையால் இடைத்தரகர்களை தவிர்த்து தற்பொழுது பதியம் ஒரு பண்டலுக்கு ரூ. 2100/- முதல் ரூ. 2300/- வரை விற்று பயன் பெறுகிறோம். ஆகையால் எங்களுக்கு தற்போது வருமானம் கூடி வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது.

எங்களுக்கு தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த வேளாண்மை வளர்ச்சி நிதி உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு எங்கள் கூட்டுப் பொறுப்புக் குழு சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று குறிப்பிட்டனர். ■

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது. தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். ■

– ஆசிரியர்,
முற்றம் மாத இதழ்.

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) – தேசிய வள மையம் (NRO)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்ட மக்கள் தொகை மற்றும் சமூகம் சார்ந்த தொற்றா நோய்கள் கண்டறியும் திட்டம்

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தேசிய நலவாழ்வு இயக்கத்தின் புற்றுநோய், நீரிழிவு நோய், இருதய நோய் மற்றும் பக்கவாதம் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான தேசிய திட்டம் (NPCDCS) என்ற திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும் உள்ள அனைத்து சுகாதார மையங்களுக்கு (ஆரம்ப சுகாதார நிலையங்கள் / அரசு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள்) வரும் 30 வயதும் அதற்கு மேற்பட்டோருக்கு உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், கருப்பைவாய் புற்றுநோய் மற்றும் மார்பகப் புற்றுநோய்க்கான நோய் கண்டறியும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நோய் கண்டறியும் பரிசோதனையை தொடர்ந்து தேவைப்படுவோருக்கு சிகிச்சையும், மற்றவர்களுக்கு நோயுறுதி செய்வதற்கான உயர் பரிசோதனைகளும், தொடர் கண்காணிப்பிற்கான சேவைகளும் வழங்கப்படுகின்றன.

NPCDCS திட்டத்தின் வழிகாட்டுதல்களின்படி, தகுதி வாய்ந்த பயனாளிகளை அவர்களது இல்லத்திற்கே களப் பணியாளர்கள் சென்று தொற்றா நோய்களுக்கான சாத்தியக்கூறு கண்டறியும் அடிப்படை ஆய்வுகளை இலவசமாக செய்யும் “மக்கள் தொகை அடிப்படையிலான” தொற்றா நோய் பரிசோதனைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி பயிற்சி பெற்ற களப்பணியாளர்களான பெண் சுகாதார தன்னார்வலர் / ஆஷா பணியாளர் / அங்கன்வாடி பணியாளர் (WHA / ASHA / AWW) தங்களுடைய துணை சுகாதார நிலையத்துக்கு உட்பட்ட வீடுகளுக்குச் சென்று கணக்கெடுத்தல், தொற்றா நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், நோய் காரணி மதிப்பீடு மற்றும் BP எலக்ட்ரானிக் உபகரணத் தின் மூலம் உயர் இரத்த அழுத்தத்தையும், குளுக்கோ மீட்டர் (Glucometer) உபகரணத்தின் மூலம் நீரிழிவு நோய்க்கான பரிசோதனையையும் மேற்கொள்வர். நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்த நோய் மற்றும் வாய் புற்றுநோய்களுக்கான சாத்தியக்கூறு உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் அருகாமையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செல்ல பரிந்துரைக்கப்படுவர். 30 மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதுடைய பெண்களுக்கு கூடுதலாக கருப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனையையும் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் செய்து கொள்ள பரிந்துரைக்கப்படும். இவை தவிர களப்பணியாளர்கள் 18 – 29 வயதுடைய அனைவருக்கும் சமூக அளவில் தொற்றா நோய்கள் காரணி மதிப்பீடு பட்டியல் (CBAC) கொண்டு நோய்க் காரணி மதிப்பீடு செய்து, அதில் அதிக காரணி மதிப்பீடு பெற்றவர்களை அருகிலுள்ள ஆரம்ப சுகாதார மையத்துக்கு செல்ல பரிந்துரைப்பர்.

களப்பணியாளர்கள் ஏற்கனவே தொற்றா நோய் கண்டறியப்பட்டு சிகிச்சையில் உள்ளோரின் பட்டியல் கொண்டு, அவர்களது தொடர் கண்காணிப்பு மற்றும் சிகிச்சை முன்னேற்றத்தை கண்காணிப்பர். சமூகத்தில் உள்ளவர்கள் குழுவாக சந்தித்து தொற்றா நோய்கள் குறித்த விழிப்புணர்வு பாடத்தையும் மேலும் சிகிச்சையில் உள்ள நோயாளிகள் இடையே பலனளிக்க கூடிய “நோயாளிகள் ஆதாரவு குழு” அமைத்தும் பணியாற்றுவர்.

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு 13.04.2018 அன்று நடைபெற்ற நிகழ்வில், வீடு வீடாகச் சென்று இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் கண்டறியும் திட்டத்தினை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் துவக்கி வைத்து, களப்பணியாளர்களுக்கு மருந்துப் பொருட்கள் அடங்கிய பெட்டகத்தை வழங்கினார்கள்.

மக்கள் தொகை மற்றும் சமூகம் சார்ந்த தொற்றா நோய்கள் கண்டறியும் முன்னோடி திட்டமானது முதற்கட்டமாக பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மூன்று மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இம்மூன்று மாவட்டங்களில் உள்ள 433 துணை சுகாதார நிலையங்களில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து அவர்களது "சமுதாய வல்லுநர் – நலவாழ்வு" எனப்படும் களப் பணியாளரை ஒரு துணை சுகாதார நிலையத்திற்கு ஒருவர் என்ற அளவில் பணியமர்த்தி மீதமுள்ள 137 துணை சுகாதார நிலையங் களில் ஒரு துணை சுகாதார நிலையத்திற்கு ஒரு ஆஷா பணியாளர் என பணியமர்த்தி இம்முன்னோடித் திட்டம் செயல்படுகிறது.

இரண்டாம் கட்டமாக கரூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் மற்றும் கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இரண்டு மாநகராட்சிகளில் இத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இதற்காக மாநில அளவிலான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 595 சமுதாய வல்லுநர் – நலவாழ்வு களப்பணியாளர்கள் மற்றும் 37 ஆஷா பணியாளர்களைக் கண்டறிதல், மாவட்ட அளவிலான பயிற்சி போன்ற முன்னேற்பாடுகளை நிறைவேற்றிய பின் சமூக அளவில் வீடுகளைக் கணக்கிடுதல் மற்றும் வீட்டில் உள்ள உரிய நபர்களுக்கு தொற்றா நோய் கண்டறியும் பணி தொடங்கும். ■

புதுச்சேரி மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கான பயிற்சி

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் மற்றும் தேசிய வள மையமானது புதுச்சேரி மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நிறுவன கட்டமைப்பு / திறன் வளர்ப்பு மற்றும் கூட்டமைப்புகளை வலுப்படுத்தி, சிறப்புடன் செயல்படுத்துவதற்கென கடந்த 2015 ஜூன் மாதம் முதல் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேற்கொள்ளப்பட்டது.

ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக தேசிய வள மையத்தின் மூலம் திட்டம் செயல்படும் அரியங்குப்பம், வில்லியனூர் மற்றும் காரைக்கால் ஆகிய ஒன்றியங்களில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தணிக்கை, தர மதிப்பீடு, ஆளுமை மற்றும் பொறுப்புணர்வு பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சி நான்கு மாவட்ட திட்ட மேலாளர்கள், 6 உதவித் திட்ட மேலாளர்கள், 22 களப் பணியாளர்கள் மற்றும் 8 சமூக வல்லுநர்களைக் கொண்டு, 16.04.2018 முதல் 28.04.2018 வரை 95 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் தர மதிப்பீடும், 45 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் தணிக்கையும், 41 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் ஆளுமை மற்றும் பொறுப்புணர்வு பயிற்சியும், மேலும் மூன்று ஒன்றியங்களிலும் புதியதாக தேர்வு செய்யப்பட்ட சமூக வல்லுநர்களுக்கான திட்ட வழிகாட்டி கையேடு பயிற்சியும் வழங்கப்பட்டது. பயிற்சியின் இறுதி நாளன்று புதுச்சேரி மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. P. T. ருத்ரகவுடு அவர்கள் பயிற்றுநர்களுடன் பயிற்சி குறித்த மதிப்பீட்டினைக் கேட்டறிந்தார். ■

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by S. BALASUBRAMANIAN, Works Manager 1, Government Central Press, No. 508, Mint Street, Vallalar Nagar, Chennai – 600 079. Published from (65,800 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN.

மாநில அளவிலான சுகாதாரத்திற்கான நுண்நிதி திரட்டல் குறித்த பயிற்சிப் பட்டறை

மாநில அளவிலான சுகாதாரத்திற்கான நுண்நிதி திரட்டல் என்ற தலைப்பில் ஒருநாள் பயிற்சிப் பட்டறை 20.04.2018 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் செயலாளர் திருமதி. சுகந்தி, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநரகத்தின் இயக்குநர் திரு. கே. பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள், வாட்டர் ஆர்க் தன்னார்வ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. வேதிகா பந்தார்கர் அவர்கள், தான் (DHAAN) நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் செயல் இயக்குநர் திரு. எம். பி. வாசிமலை அவர்கள், ASA-IDFC நிறுவனத்தின் திட்ட மேலாளர் திரு. சண்முகராஜ் அவர்கள், திரு. எச். என். சிரிவிஸ்தா (கிராமின் கூடா பைனான்ஸியல் சர்வீஸ் லிமிடெட்), திரு. ஆர். வெங்கடாசலபதி (பொது மேலாளர், BWD நிறுவனம்), திரு. எச். சி. சிவசங்கர் (சங்கமித்ரா நிறுவனம்), யுனிசெப் நிறுவனத்தின் பிரதிநிதி திரு. ஜாப் சக்காரியா போன்ற முக்கிய நபர்கள் இந்த பயிற்சிப் பட்டறைக்கு வருகை தந்து உரையாற்றினர்.

விழாவின் துவக்கத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநரகத்தின் கூடுதல் இயக்குநர் திரு. ஜி. லட்சுமிபதி அவர்கள் விழாவின் வரவேற்புரை நல்கினார். தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பயிற்சியாளர் திரு ராஜன் பாபு அவர்கள் நன்றியுரை நல்கியதுடன் இந்தப் பயிற்சிப் பட்டறையானது நிறைவுற்றது.

மாநில அளவிலான ஊக்குநர்கள் திருமதி. ராஜலட்சுமி மற்றும் திருமதி. மல்லிகா ஆகியோரும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு, தங்கள் சுகாதார அணுகுமுறையிலான களப்பணி குறித்து பகிர்ந்து கொண்டனர்.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 1722 / 2016
Reg. No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 2nd Week of the every month

கழிவறை பழக்கம், உடல் வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் அறிவு வளர்ச்சியின் அடையாளம்

திறந்தவெளியில் மலம் கழிப்பதால் வரும் நோய்கள்

- வாந்தி / வயிற்றுப்போக்கு / காலரா
- டைபாய்டு காய்ச்சல்
- குடற்புழுக்கள்
- மஞ்சள் காமாலை
- இளம்பிள்ளை வாதம்
- இரத்த சோகை

திறந்தவெளியில் மலம் கழிக்கக் கூடாது

கழிவறைகளையே பயன்படுத்த வேண்டும்

உணவுக்கு முன், கழிவறை பயன்படுத்திய பின், சோப்பு போட்டு கைகளை கழுவ வேண்டும்



நகங்களை வெட்டி சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

காலணி அணிய வேண்டும்.

சுகாதாரமாய் வாழ்ந்திடுவோம்! உடல் நலத்தை காத்திடுவோம்!